தொகுதி- ருஎ :: பகுதி-எ — Vol. 57 :: No. 7

# செந்தமிழ்

திருவள்ளுவர்
ஆண்டு 1992
பிலவ—ஐப்பசி
OCTOBER — 1961

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 17—1—62)

உள்ளுறை

1 தமிழ் இலக்கிய வாயில்
அ. கி. பரந்தாமனார், எம். ஏ., மதுரை. 195

2 "புளும்பீல்டு"
S. அகத்தியலிங்கம்,
இந்தியானா பல்கலைக்கழகம், அமெரிக்கா 207

3 இளம்பூரணர் எழுத்துரை
ஆ. சிவலிங்கனார், மயிலம். 217

4 சாத்தனும் மாடலனும்
ஆ. துரைக்கண்ணு 223

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A., (Bar-at-Law) M. L. C.

2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர். ஔவை சு. துரைச்சாமிப் பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை.

3. டாக்டர், திரு. மா. இராசமாணிக்கனார் M. A. L. T. M. O. L. Ph D. சென்னை.

4. திரு. பேராசிரியர், பி. சோதிமுத்து. M. A. B. D.

5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.

6. திரு. வி. சண்முகசுந்தரம் M. A. B. L. செயலாளர் மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர், மதுரை.

7. திரு. கி. பழனியப்பன், துணைத்தலைவர், மதுரைத் திருவள்ளுவர் கழகம்

8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர், தமிழ்விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

உ
கடவுள் துணை
# செந்தமிழ்

| | | |
|---|---|---|
| தொகுதி. ருஎ<br>Vol. 57 | திருவள்ளுவர் ஆண்டு 1992<br>பிலவ — ஐப்பசி<br>1961 — October | பகுதி. எ<br>No. 7 |


(181 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# தமிழ் இலக்கிய வாயில்

அ. கி. பரந்தாமனுர் M. A.,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

இலக்கியவகை: சங்ககாலச் சான்ருேர்கள் தமிழிலக்கியங்களை அக்கால முறைக்கு ஏற்றவாறு மிகமிகப் பொருத்தமாக அகத்திணை இலக்கியம் என்றும் புறத்திணை இலக்கியம் என்றும் பாகுபாடு செய்தார்கள்; காதல் வாழ்வைக் கூறுவதை அகத்திணை இலக்கியம் என்ருர்கள்; போர் வாழ்வையும் அரசியல் வாழ்வையும் சமய வாழ்வையும் சொல்வதைப் புறத்திணை இலக்கியம் என்ருர்கள்.

சங்க காலப் பாடல்களைத் தொகுத்த பிற்கால அறிஞர்கள் அகத்திணை, புறத்திணை என்று பிரிக்காமல் 36 நூல்களைப் பாவகையால் கீழ்க்கணக்கு என்றும் மேற்கணக்கு என்றும் பாகுபாடு செய்தார்கள்; 40 வெண்பா முதல் 1330 வெண்பா வரையிலும் உள்ள வெண்பா நூல்களை மட்டும் கீழ்க்கணக்கு என்றும், மற்ற வகையான பாக்களில் இயற்றப்பட்டவற்றை மேற்கணக்கு என்றும் பிரித்தார்கள். மேற்கணக்கைச் சேர்ந்த 100 அடிகளுக்கு மேற்பட்ட

நீண்ட அகவற்பாக்களைச் சேர்த்துப் பத்துப்பாட்டு என்றுர்கள், பிற்காலத்தவர்கள் பெருங்காப்பியங்களைப் பேரிலக்கியம் எனவும், சிறு நூல்களைச் சிற்றிலக்கியம் என்றும் கருது மாறு வகை செய்தார்கள் என உய்த்துணர இடமுண்டு. யாரோ ஒருவர் எதை எதையோ சேர்த்து எப்படியோ 96 வகைப் பிரபந்தங்கள் எனத் தவருன பாகுபாடு செய்து வைத்தார். இத்தவற்றைப் பின்வந்தவர்கள் பலரும் பின் பற்றினர் இப்போது அறிஞர்கள் இப்பிரிவு தவருனது என்று எழுதி வருகிருர்கள்.

மிகவும் பிற்காலத்தார், அளவு குறித்தும் தன்மை கருதியும் தமிழிலக்கியங்களைப் பேரிலக்கியம் என்றும் சிற்றிலக்கியம் என்றும் வகுத்தது ஓரளவு பொருத்தமானதே. இப்பேரிலக்கியமும் சிற்றிலக்கியமும் அறிவு இலக்கியமாகவும் இருக்கலாம்; உணர்ச்சி இலக்கியமாகவும் இருக்கலாம். ஒரு சில அறிவு இலக்கியத் தன்மையும் உணர்ச்சி இலக்கியத் தன்மையும் ஒருங்கே அமைந்தனவாகவும் இருக்கலாம். எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரத்தை உணர்ச்சிப் பேரிலக்கியமாகவும், மணிமேகலையை அறிவுப் பேரிலக்கியமாகவும் கூறலாம். அவ்வாறே நாலடியார், நான்மணிக் கடிகை, சிறுபிரபஞ்சமூலம் முதலிய நீதி நூல்கள் எல்லாவற்றையும் அறிவுச் சிற்றிலக்கியங்கள் என்றும், கோவை, உலா, பிள்ளைத்தமிழ், தூது, மடல், குறம், பள்ளு போன்ற நூல்களை உணர்ச்சிச் சிற்றிலக்கியங்கள் என்றும் குறிப்பிடலாம். திருக்குறளைத் தமிழ்மறையாகக் கருதுகிறோம். ஆதலால் திருக்குறளை அறிவுப் பேரிலக்கியமாகக் கருதுதல் பொருத்தமானது. காமத்துப்பாலில் உணர்ச்சியெழுப்பும் குறட்பாக்கள் ஒரு சில இருக்கின்றனவெனினும் வள்ளுவத்தை அறிவு இலக்கியம் என்று கருதுவதே சாலப் பொருத்தமாகும். வான்புகழ் வள்ளுவரை, பொதுமறையை

உலகினுக்கே ஈந்த புலவர் பெருமானுரை, பொய்யா மொழியை உலகப் பெருங்கவிஞர் என்பதைவிட உலகப் பேரறிஞர் என்பது உண்மையில் அவரைப் பெருமைப்படுத்துவதாகும். கம்பரைப்போல் உணர்ச்சி இலக்கியம் இயற்றியிருந்தால், அவரை உலகப் பெருங்கவிஞர் எனலாம். இங்ஙனம் கூறுவதனுல் திருக்குறளையோ திருவள்ளுவரையோ குறைவுபடுத்துவதாகாது என்றுணர்க.

**தமிழிலக்கியத் தொன்மை** இதுவரைக்கும் இலக்கியம் இன்னது என்றும், இலக்கியமே முற்படத் தோன்றியது என்றும், செய்யுளிலேனும் உரைநடையிலேனும் இலக்கியம் அமைந்திருக்கும் என்றும், பெருங்காப்பியம் சிறுகாப்பியம், அந்தாதி, தூது. உலா, பள்ளு குறம் முதலானவற்றை இலக்கியமாகக் கருதுவதுபோல நாடகம், சிறுகதை, நெடுங்கதை (Novel), கட்டுரை, திறனுய்வு, ஆராய்ச்சி முதலியவற்றையும் இலக்கியமாகக் கருதுதல் வேண்டும் என்றும் பொதுவாகக் கண்டோம். இனித் தமிழிலக்கியத்தின் தொன்மையையும் தன்மையையும் அதன் சிறப்பையும் பிறவற்றையும் பார்ப்போம்.

அமிழ்தினும் இனிய தமிழ்மொழியில் மிகத்தொன்மையான இலக்கியங்கள் உண்டு. சங்க இலக்கியங்களுள் பல மிகவும் தொன்மையானவை: அகநானூறும் புறநானூறும் மிகவும் பழமையானவை என்தில் ஐயமில்லை. திராவிட மொழி இலக்கியங்களுள்ளும் தமிழ் இலக்கியங்கள் மிகவும் தொன்மை மிக்கவை என்பது உலகறிந்த உண்மை. தெலுங்கு இலக்கியம் இற்றைக்கு 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இல்லை என்றும், பழங்கன்னட இலக்கியம் கி. பி. 500-ல் தோன்றியது என்றும், தமிழிலக்கியமோ ஐயமின்றி இவற்றிலும் பண்டையது என்றும் பிளாக் என்ற அறிஞர் கூறியதாகப் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை

தமது ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார். மலையாள இலக்கியம் கி. பி. 14-ஆம் நூற்றுண்டிலேதான் தோன்றியதாகக் கூறுவர். தலைசிறந்த இலக்கியங்கள் ஆங்கிலத்தில் கி. பி. 16-ஆம் நூற்றுண்டிலேதான் தோன்றின. ஆனால், சங்க இலக்கியங்கள்போல் உயர்ந்த இலக்கியங்கள், எவ்வளவு குறைத்துக் கூறினுலும், 2400 ஆண்டுகள் பழமையுடையவை என்பது மறுக்க முடியாத உண்மையாகும்; மறைக்க முடியாத உண்மையுமாகும்.

**தமிழிலக்கியத் தன்மைகள்** ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொருவகையான தமிழிலக்கியம் தோன்றியதைத் தமிழ் மொழியில் காண்கிறோம், ஒவ்வொரு காலத்து இலக்கியத்தை எடுத்து ஆராயும்போது நாம் வியத்தகத்தக்க குடும்ப மனநிலைபோன்ற உளநிலையை அந்த அந்தக் காலத்து இலக்கியம் அனைத்திலும் காண்பது உறுதி. ஒரு சிலர் மாறுபட்டிருப்பினும், பொதுவாகக் கூறுமிடத்துப் பெரும்பாலோர் ஒரே வகையான உளநிலையை வெளிப்படுத்தியிருத்தலைக் காணலாம். இங்ஙனம் ஒரே மனநிலை ஒரு காலத்து இலக்கியத்தில் தோன்றக் காரணம், அந்த அந்தக் காலத்துக் கவிஞனே எழுத்தாளனே அவன் இருக்கும் கால நிலையிலிருந்து மாறுபட முடியாததேயாகும்.

இவ்விலக்கிய உண்மைகளை உளத்தமைத்து நோக்கும்போது சங்க இலக்கியத்தில் ஒரே குடும்ப மனநிலைபோன்று ஒருவகைக் கால மனநிலை தோன்றுவது விளங்கும். அந் நூல்கள் அனைத்தும் அகப்பொருளையோ புறப்பொருளையோ சித்திரித்துக் காட்டுகின்றன; வாழ்வில் நம்பிக்கை ஊட்டுகின்றன; வாழ்வு வாழ்வதற்கே என்பதைக் குறிப்பாகத் தெரிவிக்கின்றன. இடைக்காலமாகிய கி. பி, 3ஆம் நூற்றுண்டிலிருந்து கி. பி. 12-ஆம் நூற்றுண்டு வரைக்கும்

உள்ள காலப்பரப்பில் தோன்றிய இலக்கியங்கள் சமயச் சார்புடையவை. பெருங்காப்பியமாயினும், சிறு பதிகங்களாயினும் அவையெல்லாம் ஏதாவது சமயத்தைச் சார்ந்தனவாகவே தோன்றியிருப்பதைக் காணலாம், கலிங்கத்துப் பரணி ஒன்றே வேறுபடத் தோன்றியது. படையெடுப்புக் களும் வேற்றரசர் ஆட்சியும் ஏற்பட்ட காலமான கி. பி. 16-ஆம் நூற்றுண்டிலிருந்து 19-ஆம் நூற்றுண்டு வரைக்கும் இருந்த காலப்பரப்பில் சிற்றிலக்கியங்களும் புராண இலக்கியங்களுமே பெருவாரியாகத் தோன்றியதைக் காண்கிறோம். இப்படிக் காலநிலைக்கு ஏற்பவே தமிழிலக்கியங்கள் தோன்றின என்றறிக

தமிழகத்தில் எத்தகைய குழப்பங்களும் படையெடுப் புக்களும் இருந்தபோதிலும், இலக்கியங்கள் தொடர்ச்சியாக எழுந்த வண்ணமே இருந்தன. களப்பிரர்கள் குழப்பத்திலும் சில இலக்கியங்கள் தோன்றின. தமிழுக்கு ஆதாவு அளிக்காத நாயக்கர்கள் ஆட்சியிலும் நூல்கள் தோன்றின. ஆனால், உயர்ந்த இலக்கியங்கள் தோன்றவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. பொதுவாகப் பாரதியார் கூறுகிற வாறு,

"கல்லையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையும் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப் புலவோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்"

என்பது மிகவும் உண்மை.

தமிழிலக்கியப்பரப்பு தமிழிலக்கியப்பரப்பு ஆங்கிலத்தைப் போலப் பரந்திருக்கும் நிலையைப் பெருவிட்டாலும். மதிக்கத்தக்கதாக இருக்கிறது. தமிழில் மிகப் பழமையான இலக்கியங்களும் உண்டு. மிகப் புதுமையான இலக்கியங் களும் உண்டு. ஆழ்ந்த இலக்கியங்களும் உண்டு; எளிய

இலக்கியங்களும் உண்டு. சமய இலக்கியங்களும் உண்டு. வேறு மொழியில் இல்லாத அளவு இரும்பு மனத்தையும் உருக்க வல்ல கரும்பினும் இனிக்கும் சமயப் பாடல்களும் உண்டு.

தமிழகத்தில் இருக்கும் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய இம்மதங்களுக்கும் இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவை அனைத்தும் மொழிபெயர்த்தவை அல்ல; முதல் நூல்களே.

சிறிது தமிழறிந்தவர்களும் படித்து இன்புறக்கூடிய குறம், பள்ளு போன்ற நூல்களும் உண்டு; மிகவும் கற்றவர்கள் படித்து இன்புறுதற்குரிய நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரமும், சிந்தை கவரும் சிந்தாமணியும், உலகப் பெருங் காப்பியமாக இலங்கும் கம்பன் காவியமும் உண்டு. வாழ்க்கைக்கு வழிகாட்டும் வள்ளுவர் திருக்குறள் போன்ற உலகப் புகழ்பெற்றுள்ள இலக்கியமும் உண்டு. அந்தாதி, கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களும் மிகுதியாகத் தமிழில் உண்டு.

சில நாடக நூல்கள் இருப்பினும் சுந்தரம்பிள்ளை இயற்றிய மனோன்மணீயம் தமிழில் இருக்கும் தலைசிறந்த நாடக இலக்கியமாகும்.

தமிழில் நல்ல சிறுகதை இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் இருக்கின்றன; நெடுங்கதைகளும், கட்டுரைகளும், திறனாய்வுகளும் வந்துகொண்டிருக்கின்றன; எல்லாவற்றிற்கும் மேலாக கலைக்களஞ்சியங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இக்காலத்திற்குத் தக்கபடி விஞ்ஞானத் துறையிலும் வேறு துறையிலும் இலக்கியங்கள் குவிந்து கொண்டிருக்கின்றன. புதுமைக் கவிதை நூல்களும் இந்த யந்திரக் காலத்திலும் தமிழில் வாராமல்இல்லை

கூறும் குறை பெரும்பாலான தமிழ் இலக்கியங்கள் சமயத்தோடு பிணைந்திருக்கின்றன என்று சிலர் குறை கூறுகின்றனர். ஆம்! இஃது உண்மையே. இந்திய இலக்கியங்கள் தத்துவத்தோடு பிணைந்திருக்கும் சிறப்புடையன என்று ஆங்கில அறிஞர் ஒருவர் பாராட்டியுள்ளார். சமயமும் இலக்கியமும் பின்னிப் பிணைந்திருப்பது, ஒருவகையில் குறையாகவும், மற்றொரு வகையில் சிறப்பாகவும் இருக்கிறது. ஒருவர் சைவம், வைணவம், சமணம், பௌத்தம். ஏன்?- கிறிஸ்தவம், இஸ்லாம் இவற்றை ஓரளவு அறிந்திருந்தாலன்றிப் பெரும்பான்மையான சமய இலக்கியங்களைப் படித்துத் தெரிந்துகொள்வது முடியாது. சங்க இலக்கியம் மட்டும் ஆங்கில இலக்கியம் போன்று சமயத்தினின்று பெரும்பாலும் விடுதலைபெற்று விளங்குகின்றது. பேரிலக்கியங்களாக உள்ள மணிமேகலையும், சிந்தாமணியும், கம்பராமாயணமும், பெரியபுராணமும், ஆழ்வார் அருளிச்செயல்களும், தேவார திருவாசகமும் சமயத்தைச் சார்ந்தே இருக்கின்றன. சிற்றிலக்கியங்களான கலம்பகங்களும் கோவைகளும் பிறவும் சமயச் சார்புடையனவே. இது இந்திய நாட்டு இலக்கியங்களுக்கே பொதுவான தன்மை. ஆதலால் ஒருவர் தமிழகச் சமயங்களைப் பற்றிச் சிறிதளவு தெரிந்துகொண்டு வெறுப்பின்றிப் படித்தால், அவைகளும் புரிந்துவிடும், அவற்றைப் புறக்கணித்தால் தமிழறிவு பெறுவது முடியாது. தமிழகத்துச் சமயங்களே அரிய இனிய இலக்கியங்களைத் தந்துள்ளன. சைவம் அளித்த திருவாசகம் போல் ஒரு வாசகம் ஏது? வைணவம் அளித்த இராமகாதை போல் வேறொரு காப்பியம் உண்டோ? சமணம் தந்த சிந்தாமணி இராமகாதைக்கே வழிகாட்டியாயிற்று; பெரியபுராணத்துக்குப் பேரார்வம் ஊட்டியது. மத்வெறியும் மத வெறுப்பும் இன்றி இவற்றைப் படித்தால் இவை இன்பம் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

மற்ருெரு குறையும் தமிழிலக்கியத்தைக்குறித்துக் கூறுவதுண்டு அது, பெரும்பாலான பிரசார இலக்கியங்களாக இருப்பது என்பது. இதுவும் உண்மையே, தமிழ்ச் சான்ருேர்கள் இலக்கியத்தின் குறிக்கோள் அழகு என்பதையும் அதன் பயன் இன்பம் என்பதையும் ஏற்றுக்கொள்ளாததே இக்குறைக்குக் காரணமாகும். வள்ளுவரும் கற்பதன் நோக்கம் கடவுளைத் தொழுதலே என்னும் கருத்தோடு கடவுள் வாழ்த்தின் இரண்டாவது குறளாக,

"கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்"

என்ருர். பதினெண்கீழ்க்கணக்கில் ஒன்ருன நாலடியார்,

"அலகுசால் கற்பின் அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவதெல்லாம்—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போவும் துணையறிவா ரில்"

என்று கூறுகிறது அறிவு நூல் என்பது ஈண்டு மெய்யறிவு நூலைக் குறிக்கும். கம்பர் பெருமானும் சமயக் க்ல்வியையே வற்புறுத்துகிருர். இத்தகையது தமிழகத்தின் இலக்கியக் குறிக்கோளாய் இருந்து வரும்போது, எப்படிச் சமயச் சார்பற்ற இலக்கியங்கள் தோன்றுவது முடியும்? எனவே சமயச் சார்புடையனவாகப் பிற்காலத் தமிழிலக்கியங்கள் இருப்பதைப் பெருங்குறையாகக் கருதாமல் தமிழறிவுக்காக அவற்றையும் கற்றல் வேண்டும், இக்காலத்தில் வந்துகொண்டிருக்கும் இலக்கியங்கள் இக்குறைகளுக்கு ஆட்படவில்லை. நிற்க,

**தமிழிலக்கியத்தைக் குறித்து அறிஞர்கள்** இனித் தமிழிலக்கியத்தைக் குறித்து அறிஞர்கள் கூறியுள்ளனவற்றைக்

காண்போம். தமிழிலக்கியம் டாக்டர் G. V. போப்பைய ரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அவர் தம்முடைய கல்லறையில், 'இங்கே தமிழ் மாணவன் அடக்கம் செய்யப் பட்டுள்ளான்' என்று பொறித்துவைக்குமாறு விருப்புமுறி (will) எழுதிவைத்தாரென்றால் அவரது தமிழார்வத்தை என்னென்று கூறுவது? அவர் தமிழிலக்கியத்தின் அரிய செல்வத்தை மேலைநாடு அறியுமாறு திருக்குறளையும் நாலடியாரையும் திருவாசகத்தையும் வேறு சில பாடல்களை யும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர். அவர் அதனால் தமிழிலக்கிய அமிழ்தச் சுவையை நன்கறிந்து பாராட்டியுள்ளார்.

அறிஞர் கெல்லட் என்பவர், "எந்த நாட்டினரும் பெரு மைப்படத்தக்க அருமையான இலக்கியம் தமிழ் இலக்கி யம்" என்றார். வடமொழி மறைகளை ஆங்கிலத்தில் பாங்குற மொழிபெயர்த்த பேரறிஞரும் மொழிவல்லுநருமான மாக்சு முல்லர், "தமிழ் மிகப் பண்பட்ட மொழி; தனக்கே உரிய தாக இயல்பாய் வளர்ந்த சிறந்த இலக்கியச் செல்வமுள்ள மொழி" என்று பாராட்டியுள்ளார். வின்ஸ்லோ என்பவர் "இலக்கியப் பெருமையில் லத்தீன் மொழியினையும் வெல்ல வல்லது தமிழ் மொழியே" என்று குறிப்பிட்டிருக்கக் காண் கிறோம். ஜான் மர்டாக் என்ற அறிஞர், "அழகிய இலக்கியங் களையுடையது தமிழ் மொழி" என்றார். இங்ஙனம் மேலை நாட்டு அறிஞர்கள் தமிழிலக்கியத்தைக் குறித்துப் பலபடக் கூறியுள்ளார்கள்.

வடமொழி அறிஞரான K. S. இராமசாமி சாஸ்திரி யார், "தமிழ் இலக்கியம் உலகத்திலேயே மிகவும் தொன் மையான இலக்கியங்களையுடையதோடு, உலகப் பேரிலக்கி யங்களையும் கொண்டுள்ள மொழியாகும்" என்று ஆங்கிலத்

தில் எழுதியுள்ள தமது தமிழ் இலக்கிய வரலாறு என்னும் சிறுநூலில் குறிப்பிட்டிருக்கிறார். தேசியக் கவிஞர் பாரதியாரும், 'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை'' என்று பாடினார்.

இப்படித் தமிழறிந்த ஐரோப்பிய அறிஞர்களும் இந்நாட்டு அறிஞர்களும் கவிஞர்களும், எத்திசையும் புகழ் மணக்கும் இருந்த தமிழ் இலக்கியங்களின் தொன்மையினையும் தன்மையினையும் அருமையினையும் பெருமையினையும் அழகினையும் நன்கு எடுத்துக் காட்டியிருப்பதைக் காண்கிறோம். அவர்கள் கூறியவை அனைத்தும் உண்மை; வெறும் புகழ்ச்சி அல்ல.

**படிப்பதன் பயன்** தமிழ் நாட்டில் வாழ்பவர்கள் எம்மொழியினராயினும் செம்மையான தமிழ் இலக்கியங்களைக் கற்றல் வேண்டும் இவ்விலக்கியங்களைக் கற்பதனால் எவரும் இந்நாட்டு முன்னோர்களின் எண்ணங்களையும் நன்னோக்கங்களையும் மனப் போக்கினையும் அறிந்து நன்முறையில் வாழலாம். ஒரு நாட்டு வரலாறு அந்நாட்டில் வாழ்ந்த மக்களின் புறவாழ்வை மட்டுமே காட்டும். ஒரு நாட்டு இலக்கியங்களோ அந்நாட்டில் வதிந்த மக்களின் அக வாழ்வைப் புலப்படுத்தும். இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி யன்றோ? ஆதலால் இலக்கியக் கல்வி முன்னோர்களின் மனநிலையை அறியப் பயன்படுகிறது.

இரண்டாவது ஒருவருடைய மனத்தைப் பண்படுத்தும் கருவிகளுள் இலக்கியம் சிறந்த கருவியாக இருந்து வருகிறது. மார்லி என்ற ஆங்கில நாட்டு அறிஞர், '' நல்ல பண்பை ஒருவருக்கு உண்டாக்கும் கருவிகளுள் இலக்கியம் மிகவும் வன்மையுடையது'' என்று கூறியிருப்பது காண்க.

மற்ருேர் ஆங்கிலப் பேரறிஞர் கார்டினல் நியூமென் என்பார். மனத்தைத் திருத்திப் பண்படுத்துவதற்கு தமிழிலக்கியம் மிக மிகத் தகுதியானது என்று சொல்லத் தேவையில்லை. பண்பாட்டுக் களஞ்சியமாக விளங்கும் திருக்குறள் ஒன்றே போதுமே. இதைவிட வேறேது வேண்டும்.

நல் வாழ்வு வாழ்வதற்குத் தமிழிலக்கியம் மிகவும் பயன்படும். எப்படி இன்பமாக வாழவேண்டும் என்பதற்கு நாலடியார் செய்யுள் வழி காட்டுவதைப் பாருங்கள். அச் செய்யுள் இது :

**''அறிவது அறிந்து அடங்கி அஞ்சுவது அஞ்சி**
**உறுவது உலகுஉவப்பச் செய்து - பெறுவதனுல்**
**இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது''**

இச் செய்யுள் கூறும் வழியை விட வாழ்வதற்கு வேறு என்ன வேண்டும்?

தமிழக வரலாற்றை எழுத வேண்டுமென்ருலும் தமிழிலக்கியம் இன்றியமையாதது. வரலாற்றுப் பெரும் பேராசிரியர் டாக்டர் S. கிருட்டிணசாமி ஐயங்கார், ''தென்னிந்தியாவைக் குறித்துத் தெரிந்துகொள்வதற்குத் தமிழ் இலக்கியம் இன்றுயமையாதது. ......... தமிழ் இலக்கியம் மிகவும் தொன்மையானது'' என்று தமது 'தென்னிந்தியத் தொடக்கம்' என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிருர். இப் பெரியார் தமிழ் இலக்கியம், தொன்மை மிக்க தமிழக வரலாற்றை எழுதுவதற்கு மட்டும் அல்லாது தென்னிந்திய வரலாற்றுக்கே இன்றியமையாதது என்ருர்.

சுருங்கக் கூறினுல் தமிழ் இலக்கியம் ஒருவர் நன்கு வாழ வழி காட்டுவதோடு மனத்தைப் பண்படுத்தும் கருவி

யாகவும் தமிழகவரலாற்றை எழுத இன்றியமையாததாக வும் இருப்பது என்று கூறலாம்.

**முடிவுரை** இத்தகைய சிறப்புக்களையுடைய தமிழிலக்கி யத்தை எவரும் நன்கு கற்றுப் பயனடைதல் வேண்டும்; சுவைத்து இன்புறல் வேண்டும். தனிமையில் இனிமைய ளிப்பது தமிழிலக்கியம். சிறிது முயன்றால் யாரும் அரிய தமிழ் இலக்கியத்தைக் கற்று மிகவும் இன்புறுதல் கூடும். படித்துப் பாருங்கள்; பயனடைவீர்கள்.

தண்டமிழ் நூலைக் கற்பின்
தமிழக மக்கள் ஆற்றல்,
ஒண்டொடி கற்பின் செம்மை,
உயர்ந்ததோர் அரசின் நேர்மை,
எண்டிசைப் புகழும் நந்தம்
எழிலுரு கலையின் பண்பு,
மண்டமர் வீரம், மாண்பு
மனந்தினில் தோன்றும் மாதோ.

[மறுமலர்ச்சிக் கவிதைகள்]

# "புளூம் பீல்டு"

(S. அகத்தியலிங்கம், இந்தியாஞ பல்கலைக் கழகம், அமெரிக்கா.)

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த மொழி இயல் அறிஞர் என்று மதிக்கப்படுபவர் திரு 'புளூம்பீல்டு' ஆவர். தன்னுடைய ஈடும் இணையும் அற்ற நூலான "Language" மூலம் தன்னை ஒரு சிறந்த சிந்தனையாளர், மொழி இயல் அறிஞன், மேதை என்று காட்டியவர். இன்று மொழிஇயல் ஒரு அறிவியல் என்று தளர்நடையிடுவதற்கு முழு முதல் மூலகாரணமாக இருந்தவர் திரு புளூபீல்டு ஆகும். இவருடைய நூலுக்குப் பின் மொழி இயல் எவ்வளவோ வளர்ந்து விட்டபோதிலும் இவர்தம் நூலைப் போன்ற நூல் இது வரை தோன்றவில்லை.

அமெரிக்காவைச் சார்ந்த சிகாகோ நகரத்தில் 1887-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒன்றும் நாள் பிறந்தார். இவருடைய தந்தை சிக்மண்ட்டு புளூம்பீல்டு (Sigmund Bloomfield) தாய் கரோஸாபூபர் புளூம்பீல்டு. இவருடைய உறவினர் (Fannie Bloomfield Leisler) உலகப் புகழ்பெற்ற பியோனோ பாடகி. இவருடைய சிறிய தந்தை (Maurice Bloom field) இவரைப் போன்ற சிறந்த மொழி இயல் அறிஞர். "சாண்காப்கின்" (Johns Hopkins) பல்கலைக் கழகத்தில் வடமொழி, (Sanskrit) ஒப்பிலக்கணம் ஆகியவற்றின் பேராசிரியராக இருந்தவர் (Profes or cf Sanskrit and Comparative Philology) இவர் அமெரிக்க மொழி இயல் கழகம் தோன்றக் காரணமாக இருந்தவர்களில் ஒருவர்.

புளூம்பீல்டுவின் குடும்பம் இவருடைய ஒன்பதாவது வயதில் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்தில் குடியேற வேண்டி

இருந்தது. அதனால் புளூம்பீல்டு தன்னுடைய ஆரம்ப நடு நிலைப் படிப்பை அங்கேயே அடைந்தார். பின்னர் தன்னுடைய உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்காகச் சிக்காகோ நகரம் சென்றார்.

"1903-ம் ஆண்டு இவர் தன்னுடைய B. A. படிப்புக்காக "Harvard" பல்கலைக் கழகம் சென்றார். மூன்று வருடத்தில் தன்னுடைய பத்தொன்பதாவது வயதில் A. -. (B. A.) பட்டம்பெற்று வெளிவந்தார். இங்கு இவர் பேராசிரியர் "Charles Townsend Copelard" என்பவரின் கீழ்ப் பயின்றார். இங்குதான் இவருடைய சிந்தனையும், எழுத்து வன்மையும் வளர்ந்தன.

இப்போது திரு புளூம்பீல்டு தன்னுடைய பிழைப்புக்காக வேலை செய்ய வேண்டியிருந்தது. அதனால் இவர் "விஸ்கான்சின்" (University of Wisconsin) சென்று ஜெர்மன் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆனால் அதே நேரத்தில் தன்னுடைய (M A) முதுகலைப் படிப்பையும் தொடர்ந்தார். இங்குதான் இவருடைய வாழ்க்கையில் மாற்றம் ஏற்பட்டது ஒரு சிறந்த மொழி இயல் அறிஞராக மாறுவதற்கு உரிய எண்ணம் இவருக்கு ஏற்பட்டது. இங்கு இவர் "பிரோகோச்" (Edward Prokosch) என்பவரைச் சந்தித்தார். இச் சந்திப்புத்தான் வாழ்க்கையின் திருப்பு மையமாக அமைந்தது. "பிரோகோச்" இவரைவிட ஒன்பது ஆண்டுதான் முதியவர் ஆயினும் அவருடைய போக்கும், பரந்து விளங்கிய அறிவும், பண்பும் புளூம்பீல்டை வெகுவாகக் கவர்ந்தன. பல பெரிய சிறந்த பேராசிரியர்களிடம் இவர் பாடம் கேட்டபோதும் பிரோகோச்சினுடைய சொற்கள்தான் இவருடைய காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தனவாம். சொல்

லவொண்ணு மதிப்பும் பாசமும் கொண்டார். இதனைத் திரு பிரகோச் இறந்தபோது புளூம்பீல்டு எழுதியுள்ள இரங்கற் குறிப்பில் காணலாம்*

இரண்டு ஆண்டுகட்கப்புறம் இவர் சிகாகோ பல்கலைக் கழகம் சென்றார். இங்கு இவர் தன்னுடைய "டாக்டர்" பட்டத்துக்காகப் பேராசிரியர் "உட்" (Francis A Wood) என்பவரின் கீழ் தன் ஆராய்ச்சியை நடத்தினர் இவருடைய ஆராய்ச்சி நூல் ஜெர்மன் மொழி பற்றியதாகும். (A Semasiologic differentiation in Germanic Secondary ablaut). 1909-ம் ஆண்டு தன்னுடைய பட்டத்தைப்பெற்றார். அதே ஆண்டு மார்ச்சு மாதம் 18-ம் நாள் லூயின் நகரத்தைச் சார்ந்த (St. Louis) மாது ஒருத்தியை (Alice Soyers) மணம் புரிந்தார்.

இதன் பின்னர்தான் இவருடைய மொழி இயல் வாழ்க்கை ஆரம்பமானது. ஆசிரியப் பணியில் வற்றாத ஆர்வம் கொண்ட இவர், முதன்முதலாக ஜெர்மன் ஆசிரியரா

---

*Lang. Vol. 14. (311-12) 1938.

Of Prokosch as a teacher one can Speak only in personal terms. In the summer of 1906, I came fresh out of College to Madison to be looked over for an assistantship. Desiring to earn an academic living I had developed no understanding or inclination for any branch of science. The kindly Professor Hohfeld delegated Prokosch, one of his Young instructors. to entertain me, for the day. On a small table in Prokoseh's dining room there Stood a dozen technical books and in the intervel before lunch Prokosch explained to me their use and content. By the time we sat down to the meal a matter perhaps of fifteen minutes, I had decided that I should always work in linguistics. At the end of two Years of pupilhood that followed I knew no greater infellectual pleasure than to listen to Prokosch.

கப் பல்கலைக் கழகம் ஒன்றில் பணியைத் தொடங்கினர். (University of Cincinnati: 1909-10) பின்னர் அதே நிலையில் மற்றொரு பல்கலைக் கழகத்துக்குச் சென்றார். (University of Illin is 1910-'3). இப்போது தன்னை ஒரு சிறந்த அறிஞனாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் தொடங்கிற்று. எனவே இவர் ஜெர்மன் நாட்டுக்கு மொழி இயல் படிப்புக்காகச் சென்றார். இரண்டு பல்கலைக் கழகங்களில் பயின்றார் (Universities of Heipzig and Gottingen). பல பேராசிரியர்களின் மாணவராக மதிப்புடன் விளங்கினர். நாடு திரும்பிய இவர் துணைப் பேராசிரியராக அமர்த்தப் பட்டார். பின்னர் பேராசிரியராகப் பதவி உயர்வுடன் (Ohio) ஒகையோ பல்கலைக்கழகம் சென்றார். இங்கு இவர் 1921 முதல் 27 வரை பணியை நடத்தினர். இவருடைய பிறந்த இடமான சிகாகோ நகரத்தில் சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1927–40 வரை ஜெர்மன் மொழிப் பேராசிரியராகவும், மொழி நூல் பேராசிரியராகவும் இருந்தார். இங்கு தான் இவருடைய உலகப் புகழ்பெற்ற "Language" என்ற நூல் மலர்ந்தது. பின்னர் "ஏல்" (Yale University) பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், பல பல்கலைக் கழகங்களில் கோடை காலப் பிரிவு வகுப்புகளில் பேராசிரியராகவும் பணியாற்றி வந்தார். இப்போது இவருடைய அறிவின் திறம் சிறந்து விளங்கியது. பல மன்றங்களில் அங்கத்தினராகவும் பல மன்றங்களின் தலைவராகவும் விளங்கிவந்தார்.

முதன்முதலாக இவர் இந்தோ ஐரோப்பிய மொழிகள் பற்றியே எழுதிவந்தார். காலப்போக்கில் இவருடைய மொழி நூல் புலமை மற்று எல்லாத் துறைகளிலும் பரந்தது, ஜெர்மானிய மொழியின் ஒலியன் இயல், இலக்கணம் (Merphology) போன்றவற்றை எழுதிக்கொண்டிருந்த இவர் எல்லா மொழிக் கூட்டங்களையும் பற்றி ஆராயத்

தொடங்கினர். 1914-ல் இவருடைய முதல் நூல் வெளியாயிற்று. (An Introduction to the Study of Language) இதற்கு முன்னுல் இவர் பல கட்டுரைகள் பல தகுதியுரைகள், பல திறனுய்வுகள் எழுதியுள்ளார். 1917-ல் இவர் "Tagalog" மொழி பற்றிய நூல் ஒன்றை வெளியிட்டார். இந்த வெளியீடு இவருடைய பரந்த அறிவைப் படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது. எனினும் 1933-ல் வெளிவந்த 'Language" என்ற நூலே இவருடைய வாழ்க்கையில் சிறந்த நூல்.

பல்வேறு துறையிலும் இந்நூல் சிறந்து விளங்குவதைக் காணலாம். மொழி இயல் துறை இன்று எத்தனையோ அளவுக்கு வளர்ந்துவிட்டபோதிலும் இவருடைய நூலைக் கருவூலமாகப் போற்றுகின்றனர் மொழி இயல் அறிஞர்கள். இதன் சொற்களை எடுத்து ஆளாத மொழி இயல் அறிஞர்களே இன்று கிடையா என்று கூறலாம். இந்த நூலால் தோன்றிய புதுக் கருத்துக்கள் பல. எத்தனையோ சிந்தனையாளர்களைச் சிந்திக்கத் தூண்டியது இந்நூல் இதனுல் பயன்பெற்ற மாணவர்கள் பலர். எனினும் இதன் ஆசிரியர் மிக அடக்கமாகவே இந்நூல் பற்றிக் குறிப்பிடுவார். இதனுடைய முன்னுரையில் இப்பேராசிரியரின் அடக்கமும் பண்பும் மிளிர்வதைக் காணலாம். இது பற்றிக் கூறும்போது "இந்நூல் மொழி இயலுள் புகுகின்ற புதிய

---

Like its predecessor, this book is intended for the general and for tue Student who is entering upon linguistic work *Dang Introduction* VII.

Even professional linguists usually find it Slow reading-not because it is obscurely written but because it ss Carefully says in every Sentence exactly what is means, because every word is essential and every definition must be taken Seriously.

*Long. Volu. 25. Page 92.*

கப் பல்கலைக் கழகம் ஒன்றில் பணியைத் தொடங்கினர். (University of Cincinnati: 1909-10) பின்னர் அதே நிலையில் மற்றொரு பல்கலைக் கழகத்துக்குச் சென்றார். (University of Illin is 1910-13). இப்போது தன்னை ஒரு சிறந்த அறிஞனாக மாற்ற வேண்டும் என்ற எண்ணம் தொடங்கிற்று. எனவே இவர் ஜெர்மன் நாட்டுக்கு மொழி இயல் படிப்புக்காகச் சென்றார். இரண்டு பல்கலைக் கழகங்களில் பயின்றார் (Universities of Heipzig and Gottingen). பல பேராசிரியர்களின் மாணவராக மதிப்புடன் விளங்கினர். நாடு திரும்பிய இவர் துணைப் பேராசிரியராக அமர்த்தப்பட்டார். பின்னர் பேராசிரியராகப் பதவி உயர்வுடன் (Ohio) ஒகையோ பல்கலைக்கழகம் சென்றார். இங்கு இவர் 1921 முதல் 27 வரை பணியை நடத்தினர். இவருடைய பிறந்த இடமான சிகாகோ நகரத்தில் சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1927–40 வரை ஜெர்மன் மொழிப் பேராசிரியராகவும், மொழி நூல் பேராசிரியராகவும் இருந்தார். இங்கு தான் இவருடைய உலகப் புகழ்பெற்ற "Language" என்ற நூல் மலர்ந்தது. பின்னர் "ஏல்" (Yale University) பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், பல பல்கலைக் கழகங்களில் கோடை காலப் பிரிவு வகுப்புகளில் பேராசிரியராகவும் பணியாற்றி வந்தார். இப்போது இவருடைய அறிவின் திறம் சிறந்து விளங்கியது. பல மன்றங்களில் அங்கத்தினராகவும் பல மன்றங்களின் தலைவராகவும் விளங்கிவந்தார்.

முதன்முதலாக இவர் இந்தோ ஐரோப்பிய மொழிகள் பற்றியே எழுதிவந்தார். காலப்போக்கில் இவருடைய மொழி நூல் புலமை மற்று எல்லாத் துறைகளிலும் பரந்தது. ஜெர்மானிய மொழியின் ஒலியன் இயல், இலக்கணம் (Merphology) போன்றவற்றை எழுதிக்கொண்டிருந்த இவர் எல்லா மொழிக் கூட்டங்களையும் பற்றி ஆராயத்

தொடங்கினர். 1914-ல் இவருடைய முதல் நூல் வெளியாயிற்று. (An Introduction to the Study of Language) இதற்கு முன்னுல் இவர் பல கட்டுரைகள் பல தகுதியுரைகள். பல திறனுய்வுகள் எழுதியுள்ளார். 1917-ல் இவர் "Tagalog" மொழி பற்றிய நூல் ஒன்றை வெளியிட்டார். இந்த வெளியீடு இவருடைய பரந்த அறிவைப் படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது. எனினும் 1933-ல் வெளிவந்த 'Language" என்ற நூலே இவருடைய வாழ்க்கையில் சிறந்த நூல்.

பல்வேறு துறையிலும் இந்நூல் சிறந்து விளங்குவதைக் காணலாம். மொழி இயல் துறை இன்று எத்தனையோ அளவுக்கு வளர்ந்துவிட்டபோதிலும் இவருடைய நூலைக் கருவூலமாகப் போற்றுகின்றனர் மொழி இயல் அறிஞர்கள். இதன் சொற்களை எடுத்து ஆளாத மொழி இயல் அறிஞர்களே இன்று கிடையா என்று கூறலாம். இந்த நூலால் தோன்றிய புதுக் கருத்துக்கள் பல. எத்தனையோ சிந்தனையாளர்களைச் சிந்திக்கத் தூண்டியது இந்நூல் இதனுல் பயன்பெற்ற மாணவர்கள் பலர். எனினும் இதன் ஆசிரியர் மிக அடக்கமாகவே இந்நூல் பற்றிக் குறிப்பிடுவார். இதனுடைய முன்னுரையில் இப்பேராசிரியரின் அடக்கமும் பண்பும் மிளிர்வதைக் காணலாம். இது பற்றிக் கூறும்போது "இந்நூல் மொழி இயலுள் புகுகின்ற புதிய

---

Like its predecessor, this book is intended for the general and for tue Student who is entering upon linguistic work *Dang Introduction* VII.

Even professional linguists usually find it Slow reading-not because it is obscurely written but because it ss Carefully says in every Sentence exactly what is means, because every word is essential and every definition must be taken Seriously.

*Long. Volu. 25. Page 92.*

வர்கட்காக எழுதப்பட்டது'' என்று கூறுகிறார். மேலும் இவர் பேசும்போது இது உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்காக எழுதப்பட்டது என்று கூறுவாராம். ஆனால் 'இதைச் சிறந்த மொழி இயல் அறிஞர்களும்கூட கடினமாகவே கற்கின்றனர்'' என்று கூறுகிறார் திரு. பிளாக் (Blcck) அவர்கள். அத்தனை அளவுக்குக் கருத்துச் செறிந்து ஒரு சொல் கூட பயனின்றிப் பயன்படுத்தப்படாது ஆழத்துடன் காணப்படுகிறது. இதனைப் பற்றி எழுதிய ''கெண்டு' (Roland g Kend) அவர்கள் இந்நூல் எல்லோரும் படித்துப் பயன்பட வேண்டிய நூல் என்பர். இன்னும் இந்நூலைப் பற்றி ஆசிரியர் தன் முகவுரையில் ''1914ல் வெளிவந்த நூலின் விரிவும் விளக்கமும் மாற்றமும என்று கூறுவார்* ஆனால் அந்நூலுக்கும் இந்நூலுக்கும் மிகுந்த வேற்றுமை உண்டு எலலா வகையிலும் இது புது நூலாகும். இவருக்குச் சிறந்த உளநூல் வல்லுநரான ''வெய்சு''விடம் (Albert Paul Weiss) மிகுந்த மதிப்பு உண்டு. இதன் காரணமாக அவருடைய கருத்துக்கள் பல இந்நூலில் புகுந்துள்ளன. எத்தனை அளவு இவரிடம் ஆல்பர்ட்டின் செல்வாக்கு இருந்தது என்பதை அவர் இறந்தபோது புளூம் பீல்டு எழுதிய இரங்கல் குறிப்பு காட்டும்**

ஆரம்பப் பள்ளியில் மாணவர்கட்கு மொழி பயிற்றுவிக்கும் முறை மாற வேண்டும் என்ற விருப்பம் கொண்டவர். பழைய முறையால் மாணவர்களுடைய நேரமும் சக்தி

---

* This book is a revised version of the authors Introduction to the study of Language appeared in 1914.

*Lang. Intro.* VII.

** The time may come near when Albert Paul Weiss will be Counted a heroic figure in the progress.

*Lang. Vol. 7. Pa. 221.*

யும் வீணுகின்றன என்று கருத்துக்கொண்டவர். அறிவியல் மனிதர்களின் வாழ்க்கைச் சம்பவங்களை உணரவும் அதனைக் கட்டுப்படுத்தவும் உதவ வேண்டும் என்பது இவர் கொள்கை. இந்த இவருடைய எண்ணத்தை இவரது புத்தகத்தின் கடை அதிகாரத்தில் நன்கு காண முடியும். இவருடைய இந்த எண்ணத்தில் உருவானதுதான். இவரது "ஜெர்மன்" ஆரம்ப நூல், ஆங்கில ஆரம்ப நூல் (German beginner's book, English Primer) போன்றவை. சிகாகோ நகரப் பள்ளியில் இம்முறை பயன்படுத்தப்பட்டு வெற்றிபெற்றது ஆயினும் இம்முறை பின்பற்றப்படாமல் போனது இது பற்றி அவர் குறிப்பிடுவது காணத் தக்கதாகும்***

கடந்த உலகப் போரின்போது இவருடைய எண்ணங்களும் கொள்கைகளும் நல்ல பயனைத் தந்தன. அன்னிய நாட்டு மொழி பற்றிய இவருடைய கருத்துக்கள் மொழி இயல் மன்றம் (Linguistic Society of America) மூலம் அன்னிய நாடு செல்லும் படையினருக்குப் பயிற்றுவிக்கின்ற நிலை ஏற்பட்டது. இதன் மூலம் வெளியான பல நூற்களில் இவருடைய எண்ணங்கள் பிரதிபலித்தன. நேரடியாக இவர் தொடர்புகொள்ளாவிடினும் இவர்தான் முக்கிய காரணமாக இருந்தார். இப்போது இவர் எழுதிய "Outline guide for the practical Study of foreign language" என்ற வெளியீடு ஒவ்வொரு மொழி இயல் அறி

*** The basic teaching of our Schools, in reading and writing in Standard language and Composition is dominated Still by educationists who Knowing nothing about language Waste Years of every Child's time and leave our Community Semi literate.

Twenty one Years of the Linguistic Society.

*Lang. Volu. 22. 1946,*

ஞனும் மொழி பேசுகின்ற மக்களை (Informants) எவ் வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறும் சிறந்த வெளியீடாகும்.

இவருடைய அறிவும் பழக்கமும் ஒரு மொழிக் கூட்டத் தின்பாலோ கட்டுப்பட்டதன்று. பரந்துபட்டதாகும். இவ ருக்கு ஒரு முறை படித்தால் அப்படியே மறக்காமல் நினை வாற்றலுடன் இருக்கின்ற சக்தி உண்டு. இந்த சக்தி இவரை முற்கால மொழி இயல் அறிஞர்கள்பால் மதிப்புக் கொள்ளச்செய்தது ஜெர்மன், கிரேக்க, இந்திய, சிலாவிய (Slavic) இந்தோ மலாய மொழிக் கூட்டங்களில் எல்லாம் இவருக்கு மிகுந்த தொடர்பு உண்டு. இந்திய இலக்கண வாசிரியரான பாணினியிடம் மிகுந்த மதிப்புக்கொண்டவர். இதை இவருடைய நூலில் பல இடங்களில் காணமுடியும் *

இத்தனையும் கொண்ட இவர் பார்வைக்கு அத்தனை அளவுக்கு எடுப்பான தோற்றமும் கவரும் சக்தியும் மிடுக் கான போக்கும் கொண்டவர் அல்லர். எக்கூட்டத்திலும் தன்னைப் பெரியவராகக் காட்டி முன்னணியில் நிற்கின்ற தன்மை இவரிடம் கிடையாது. எப்போதும் பின்னணியிலே இருப்பார். தன்னுடைய கருத்துக்களை அடுத்தவர்களிடம் திணிக்கின்ற தன்மை இவரிடம் கிடையாது. இவருடைய மாணவன் என்று உரிமை கொண்டாடுகின்றவர் எவரும் இல்லை. இவருடைய மாணவர் எவருமே இல்லை. ஆனால் எல் லோருமே இவருடைய மாணவர்தாம். இவராலும் இவரு டைய நூலாலும் பயன்பெறாதவரே இல்லை- இவரைப் பின் பற்றுகின்றவர்கள் என்று சொல்லுகின்ற பலர் இவரை

---

* Chapters 5-8 Language: Chapters 10-16 Language. Here the Hindu hit upon the apparently artificial Dut in practice eminently Serviceable device of Speaking of a Zero element.

*Language Page 500-501,*

நேரில் பார்த்தது கிடையாது. வாதப்பிரதிவாதங்களில் அதிகமாகக் கவரமாட்டார்.

இவர் செய்த பணி எல்லாவற்றிலும் மிக முக்கியமானது மொழி இயலை 'அறிவியல்' (Science) என்ற நிலைக்கு உயர்த்தியதுதான். இதுபற்றிய இவருடைய கட்டுரைகள் ஊன்றிப் படித்தின்புறத்தக் கனவாகும்.

இவர் 1909 முதல் 1946 வரை இருநூற்றுக்கதிகமான தலைப்புகளில் பல செய்திகள் பற்றி எழுதியுள்ளார். இவற்றில் பல கட்டுரைகள், பல திறனாய்வுகள், பல விமரிசனங்கள், சில சிறு புத்தகங்கள், சில புத்தகங்கள். இவர் எழுதாத மொழி இயல் துறையே இல்லை என்று கூறலாம். இவர் முதலில் எழுதியது ஒரு நாடகம். முடிவில் எழுதியது மொழி இயல் மன்றம் பற்றியது. 1909ல் இவர் எழுத்தத் தொடங்கியது; 1946ல் முடிவு பெற்றது. ஆனால் என்றும் மொழி இயல் மாணவர்களின் நெஞ்சில் நீங்கா இடம் பெற்று நிற்கும்.

---

இவருடைய வாழ்வில் உச்சிநிலையில் வலி நோயால் பீடிக்கப்பட்டார். 1916 மே மாதம் 27ம் நாள் இந்நோய் இவரைத் தாக்கிற்று. வாழ்வின் எல்லா நலன்களையும் பெற்று வாழ்ந்த இவர் இதனுடைய தாக்குதலுக்குப்பணிய வேண்டியவரானார். எட்டு வாரங்கள் நினைவின்றிப் படுக்கையில் இருந்தார். பின்னர் சற்றுத் தேறிய நிலை ஏற்பட்டது. மொழி இயல் அறிஞர்களின் உள்ளங்கள் மலர்ந்தன. சில சில நேரங்களில் நோய்வாய்பட்ட போதிலும் கல்லூரிக்குச் செல்வார். உருள்கின்ற நாற்காலியில் (wheel chair) இருப்பார். மற்றவர் கூறும் செய்திகளைக் கேட்பார். கண் பார்வையை இழந்தபோதிலும் ஓரளவு நினைவாற்றலால் மற்றவர்க்கு உதவுவார். ஆனால் வர வர உடல் நலம் பாதிக்

கப்பட்டது. 1948ல் "Language" இதழ் அவருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த நூலை வாங்கிய போது உணர்ச்சி வயப்பட்டு, கண்ணீர் மல்கி நாக்குழறி நின்றாராம். எத்தனையோ மொழிகளைப் பற்றிய செய்திகளைத் தந்த அச்சிந்தனையாளருக்கு தனக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்ட அந்த இதழை வாசிக்க முடியவில்லையே என்று ஏக்கம் போலும். அந்த இதழ் உருவாகக் காரணமாக இருந்த அவருக்கு அவருக்காகப் படைக்கப்பட்டப் பாசமலரை நுகர முடியவில்லை. இந்த ஏக்கம் பார்த்தோரைக் கலங்கச் செய்தது. மீண்டும் படுக்கை; மீண்டும் தளர்ச்சி; மனிதனாகப் பிறந்து மனிதப் பண்போடு வாழ்ந்த அவர் 1949ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18ம் நாள் தன்னுடைய 62வது வயதில் காலமானார்.

# இளம்பூரணர் எழுத்துரை

ஆ. சிவலிங்கனார், மயிலம்

## சிலவுத்திகள்

எழுத்ததிகாரத்தில் இளம்பூரணரால் எடுத்தாளப் பட்ட உத்திகள் பல. தன்னின முடித்தல், ஒன்றின முடித் தல், ஒன்றென முடித்தல், உரையிற்கோடல், ஞாபகம், இரண்டுற மொழிதல், தந்துபுணர்ந்துரைத்தல், வந்தது கொண்டு வாராததுணர்தல், பிறன் கோட்கூறல், உடன் படல், தொகுத்து முடித்தல், தலைதடுமாற்றம்தந்து புணர்ந்துரைத்தல் ஆகிய உத்திகள் ஆளப்பட்டன. இவற் றுள் முதல் ஐந்து உத்திகள் பற்றி இளம்பூரணர் கொண்ட கருத்துக்கேற்ப அவற்றை அவர் சுட்டிச் சென்ற இடங் களிற் பொருத்திக்கட்ட வேண்டுவது இன்றியமையாததே. ஏன்எனின் தன்னின முடித்தல் என்று கூறியதையே ஒன் றின முடித்தல் என்று கூறியதையே தன்னின முடித்தல் என்றும் அல்லது ஒன்றென முடித்தல் என்றும் இப்படி யாக மாறியும் கூற இடமுண்டு ஆதலின். மற்றைய உத்தி கள் யாவும் எளிதிற் பொருள் விளங்குவன. அதனால் அவை பற்றிக் கூறாது விட்டு முன்னவற்றைப் பற்றியே கூறுகின் றேம்,

### தன்னின முடித்தல்

இவ்வுத்தி ஐந்திடங்களில் ஆளப்பட்டுள்ளது. தன்னி னம் என்பதற்குத் தன்போன்ற இனம் எனவும் தனக்கு இனம் எனவும் பொருள் கொள்ளலாம். ‘க’ என்பது வல் லெழுத்து. ‘ச’ என்பது அதுபோன்ற வல்லெழுத்து ‘ங’ என்பது க என்பதற்கு இன எழுத்து. இவ்விரண்டு

பொருள்களுள் உரையாசிரியரால் கொள்ளப்பட்டது தன் போன்ற இனம் என்ற பொருளேயாம். அதனுல் தன்னின முடித்தலாவது "ஒரே இனமானவற்றுள் ஒன்றற்கோ பல வற்றிற்கோ ஓர் இலக்கண முடிபு கூறியபோது அவ்விடத் திலேயே கூருது ஒழிந்த அவை போன்ற இனங்களையும் பொருத்திக்கொள்ளுதல்" என்க.

(1) வினுப் பொருளையுணர்த்தும் எழுத்துத்கள் ஆ, எ, ஏ, ஓ, யா என்பனவாம். ஆசிரியர் தொல்காப்பியர், "அவற்றுள், ஆ ஏ ஓ அம்மூன்றும் வினு" (32) என மூன் றைமட்டும் கூறினர். எ கரமும் யாவும் விடப்பட்டன. என் ருலும் இந்நூற்பாவிலேயே அவ்விரண்டும் வினுப் பொருள் உணர்த்தும் என்று முடித்துக்கொள்ளல் வேண்டும். இந் நூற்பாவில் உரையாசிரியர் 'தன்னின முடித்தல் என்பத ஞல் எகரமும் யகர ஆகாரமும் வினுப்பெறும் எனக் கொள்க" என்றெழுதினர்.

(2) ரகார ழகாரங்கள் குறிற்கீழ் ஒற்ருக வருதல் இல்லை. நெடிற்கீழ் ஒற்ருக வருதல்உண்டு. தார், தாழ் எனக் காணலாம். குறிற்கீழ் ஒற்ருக வருதல் இல்லையாயினும் குறி லிணைக்கீழ் ஒற்ருக வருதல் உண்டு. புகர், புகழ் எனக் காணலாம். குறிற்கீழ் வாராதவை குறிலிணைக்கீழ் மட்டும் எவ்வாறு வரலாம் என்ற ஐயம் எழும் ஆதலின்,

குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல

என்று காரணம் காட்டினர் ஆசிரியர். இரண்டுக்கு மேற் பட்டுத் தொடர்ந்த எழுத்து மொழிகள் ஒரு மாத்திரை யைக் கடந்தனவாதலின் நெடில் தன்மை அடைந்துவிட் டன. அதனுல் புகர், புகழ் என்பனவற்றின் ரகர ழகரங்கள் நெடிற்கீழ் ஒற்று என்று கருதப்படும் என்பதாம். இரண்

டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் தொடர்ந்த மொழிகள் ஒரு மாத்திரையைக் கடந்தனவாதலின் புகர் முதலியன போலவே புலவர் என்ருற்போல மூன்று மாத்திரையின் பின்னும் வரும் ரகர ஒற்றையும் நெடில்கீழ் ஒற்றென்றே கொள்ள வேண்டும். எனவே, புகர், புலவர், புரவலர் என்ப னவற்றின் ரகரங்கள் நெடிற்கீழ் ரகரங்கள் என்ற ஒரே இனங்களாம். இவற்றுள் மேலைச் சூத்திரத்து (50) அகர், புகர் எனக் குறிற்கீழ் ரகரம் காட்டப்பட்டாலும் தன்னின முடித்தல் என்பதனுல் மற்றவற்றையும்கொள்ள வேண்டும். அதனுல் உரையாசிரியர், புலவர் என்ருற்போல இரண்டு மாத்திரையை இறந்ததன் பின்னும் வருமால் எனின் அவை யும் தன்னின முடித்தல் என்பதனுல் நெடிற்கீழ் ஒற்றெனப் படும்'' என்றெழுதினுர்.

(3) நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய (111)

இந்நூற்பாவில், வினைத்தொகை பண்புத்தொகை அன் மொழித்தொகை, வேற்றுமைத்தொகை, உவமைத்தொகை முதலியன பிளந்து முடியாதனவா யிருத்தலின் இரண்டு சொற்களாயினும் ஒரு சொல் எனவேபடும் என எழுதினர் உரையாசிரியர். எனவே அத்தொகைகள் யாவும் பிளந்து முடியாத நிலையில் ஒரு சொல் என்ற இனத்தில் அடங்கும். அவற்றைத் தனித்தனியே ''வினைத் தொகையும் பண்புத் தொகையும் பிளந்து முடியாமையின் ஒரு சொல் எனப் படும் அன்மொழித் தொகையும் தனக்கு வேறு ஓர் முடிபு இன்மையின் ஒரு சொல் எனப்படும்'' என்று எழுதியவர், ''இனி ஒழிந்த வேற்றுமைத் தொகையும் உவமத் தொகை யும் தன்னின முடித்தல் என்றதனுல் ஈண்டு ஒரு சொல் எனப்படும்'' என்று எழுதினுர். இங்கு அவ்வுத்தி ஆசிரியர்

நூற்பாவில் காட்டப்படுதல் இன்றி உரையாசியர் தாம் எழுதிய உரையிலேயே காட்டப்பட்டதென்க.

(4) உயிரீற்றுச் சொற்களும் புள்ளியீற்றுச் சொற்களும் வருமொழியோடு வேற்றுமைப் பொருளில் எவ்வெவ்வாறு புணரும் என்பது உயிர் மயங்கியல் புள்ளி மயங்கியல்களில் கூறப்பட்டன. அவ்வியல்களில் எல்லா வேற்றுமைகட்கும் பொதுவாகக் கூறப்பட்டன. அவற்றுள் இரண்டாம் வேற்றுமை அப்பொது விதிகட்கு உட்பட்டதாயினும் தான் வினைகொண்டு முடியும்வழி மாறுபட்டும் வரப்பெறும். அதற்காக ஆசிரியர் "மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடுதோன்றலும்" (158) என்ற நூற்பா அமைத்தார். அதுபோலவே வினையொடு முடியும் வழிப்பொதுவிதிகட்கு மாறுபடவரும் ஏழாம் வேற்றுமைக்குத் தனிநூற்பா அமைக்கவில்லை. பொதுவிதிக்கு மாறுபடவருதல் என்ற வகையில் ஒன்ருன இனங்களுள் ஒன்றற்கு மட்டும் நூற்பா அமைத்துச் சென்ருலும் அவ்விடத்திலேயே மற்ருென்றற்கும் இலக்கணம் முடித்துக் கொள்ள வேண்டும். "தன்னின முடித்தல் என்பதனுல் ஏழாம் வேற்றுமை வினையொடு முடியும்வழித்திரிபும் கொள்க. வரைபாய் வருடை, புலம்புக்கனனே புல்லணற்காளை எனவரும்" என்று உரையாசிரியர் கூறினர்.

(5) "அன்ன என்னும் உவமக்கிளவியும்" (211) என்னும் நூற்பாவில் பல என்னும் சொல் வருமொழி வல்லெழுத்துடன் சேரும் போது (பல குதிரை) என இயல்பாகும் என்பது கூறப்பட்டது. பல என்பது அகர வீற்றுப் பன்மைச்சொல். அதே இனமான மற்ருெருசொல் சில என்பது. அது பற்றிச் சொல்லவில்லை ஆசிரியர். என்ருலும் அதையும் கொள்ளவேண்டும். அதனுல் "தன்னின முடித்தல் என்பத

னல் பல என்பதன் இனமாகிய சில என்பதற்கும் அவ்வியல்பு கொள்க. சில குதிரை எனவரும்'' என்றெழுதினர்

**ஒன்றின முடித்தல்**

ஒன்றின முடித்தல் என்பது பொருந்தும் இனம்என்று முடித்தலாம். அதாவது கூறப்பட்டதற்கு நேர்இனமாக (தன்போலவோ தனக்கோ) இன்றிக் கூறப்பட்டதிலேயே அடக்குதற்குரிய இனம் என்று கூறாததையும் முடித்துக் காட்டுதலாம். இது வந்த நான்கிடங்களைக் காண்போம்.

(1) ''எஞ்சிய வெல்லாம் எஞ்சுதலிலவே''(77) என்ற நூற்பாவின் இறுதியில் ''தன்னையுணர நின்றவழி மொழிகட்கு இது கருவியாக ஈற்றகத்து முடிபு ஒன்றின முடித்தலாற் கொள்க'' என உரையாசிரியர் எழுதியதில் இவ்விலக்கணம் காணலாம். அந்நூற்பாவில் மொழிக்கு ஈறாகாத உயிர், மெய்கள் தம்பெயர் கூறும் வழி ஈறாகும் என்பது கூறப்பட்டது. ஙா என்ற எழுத்து மொழியிறுதியில் வாராதது. தன்பெயர் கூறிய வழி ஙா என அதுவே முதலும் ஈறுமாக நின்றது. ஙா என்பது தன்பெயர் கூறிய வழித் தன்னையே உணர்த்தும். மொழியாவது பொருளையுணர்த்தும். ஙா என்பது பிறிது ஒரு பொருளை யுணர்த்தவில்லையாயினும், ஙா என்ற எழுத்து எனத் தன்னையே உணர்த்துகின்றதாதலின அதுவும் சொல் நிலைக்குரியதாம். எனவே ஙா + பெரிது எனப் புணர்க்குமிடத்தில் ஆகாரவினத்தில் பொருந்தும் எனக் கொண்டு ஆகார வீற்றில் அடக்கி அவ்வீற்று முடிபுப்படி 'ஙாப் பெரிது' எனப் புணர்ச்சி முடிவு கொள்ளவேண்டும். இப்படியே பிறவும் கொள்க.

(2) ''அத்தேவற்றே ..........வல்லெழுத்து மிகுமே'' (134) இந்நூற்பாவின்படி கலன் + கோடு என்பன அத்துச் சாரியை பெற்றுக் 'கலத்துக்கோடு' என முடியும். அவ் +

கோடு என்பன அவற்றுக்கோடு என வற்றுப்பெற்று முடியும். அவை என்ற ஐகார வீற்றுச் சொல் ஐகெட்டு அவ்என வகர வீற்றுச் சொல்லாக நிற்பின் அது கோடு என்பதுடன் சேரும் போது எவ்வாறு முடியும் என ஐயம் எழுவதியல்பு. ஐகாரம்கெட்டு வகரவீருக நிற்றலின் அதையும் மெய்யீருகவே கொண்டு 'அவ்' என்ற மெய்யீறு போலவே புணர்க்க வேண்டும். இதைக் கூறவே, "கலன் என னகரமாக நிறுத்திக் கெடுக்கவே, ஒன்றின முடித்தல் என்பதனல் புள்ளியீறல் வழி விகார வகையால் நின்றனவும் அவற்றின மிசை ஒற்றென்று கெடுக்கப்படும்' என உரையாசிரியர் எழுதினுர். 'அவ்' என்பது என்பது புள்ளியீறு. 'அவை' என்பதில் ஐகாரம் கெட்டு அவ் என நிற்பது விகாரப்பட்டதாதலின் அஃது புள்ளியீறு என்பதற்கில்லையாயினும் புள்ளியீற்றுள் அடக்குதற்குப் பொருந்துதலின் அதனுள் அடக்கிக்கொள்ள வேண்டும்.

(3) நும் என்ற பெயர் வேற்றுமை வழியில் வருமொழிவல்லெழுத்தோடு சேரும் போது மகரம் கெட்டு வல்லெழுத்துக்கு இனமான மெல்லெழுத்து மிக்குமுடியும். உதாரணம் நும்+கை=நுங்கை. இது பற்றிய நூற்பா, "நும் மென் ஒரு பெயர் மெல்லெழுத்து மிகுமே" (326) என்பதாம். தொல்காப்பியர் காலத்தில் இல்லாது பிற்காலத்து முன்னிலைப் பன்மை வழக்காக 'உம்' என்பது வந்தது. அது பிற்கால வழக்காதலினுல் அதை நும் என்பது போன்ற இனமாகவோ அல்லது அதற்கு இனமாகவோ கொள்வதற்கில்லை என்ருலும் மகர வீருகவும் முன்னிலைப் பன்மைப் பெயராகவும் வந்துவிட்டமையால் அதை நும் என்பதில் ஒன்றும் இனம் எனக் கொள்ளவேண்டும். அதனுல் அந்நூற்பா வுரையில், "ஒன்றின முடித்தல் என்பதனுல் 'உங்கை' என உம் என்பதன் முடிபும் இவ்வீற்ருகக் கொள்க" என்ருர்.

(தொடரும்)

# சாத்தனும் மாடலனும்

(ஆ. துரைக்கண்ணு)

சந்ததம் மறவாச் செந்தமிழ்ச் சிலம்பின்கண் 'மாடல மறையோன்' என்னும் ஓர் அந்தணன், முறையே அடைக்கலக் காதை, நீர்ப்படைக்காதை, நடுகற்காதை, வரந்தருகாதை ஆகிய நான்கு காதைகளிற்றேன்றி, ஒன்பது இடங்களிற் பேசுகிருன்.

தாழ்நீர் வேலித் தலைச்செங்கானத்திற் பிறந்த அவன், பொதிய மலையை வலங்கொண்டு வணங்கி, குமரிப் பெருந் துறை முறையின் ஆடி, தனது சுற்றம் இருக்கும் இடம் நோக்கித் திரும்பிவந்து கொண்டிருக்கையில் வழிநடந்த வருத்தம் களைதல் விழைந்து கவுந்தியடிகள், கண்ணகி, கோவலன் ஆகிய மூவருமிருந்த பள்ளியில் நுழைகிருன்.

அடைக்கலக்காதையில், மாதவி தாய்மையுற்றது, அவளது திருமகளுக்கு 'மணிமேகலை' யெனப் பெயரிட்டது போன்ற செய்திகளை உரைக்கும் இவ்வந்தணன் வாயிலாக, கோவலனின் அறச் செயல்களும் வெளிப்படுகின்றன. 'தளர்ந்த நடையின் தண்டுகால் ஊன்றி வளைந்த யாக்கை மறையோன்' ஒருவனை யானையினின்று காத்ததும், கீரிப் பிள்ளை யிறந்த காரணமாகக் கணவனுல் கைவிடப்பட்ட பார்ப்பனிக்கு அறம்பல செய்ததும், பத்தினி ஒருத்தியின் கொழுநனுக்கும் அவனது தமருக்கும் ஏற்பட்ட வறுமையை நீக்கிப் பல்லாண்டுகாலம் அவர்களைப் புரந்ததும் ஆகிய கோவலனது அறத்தின்பாற்பட்ட பெருமைகளையெல்லாம் மறையவன் உரைக்கின்ருன்.

"நீ இப்பிறப்பிற் செய்தனவெல்லாம் நல்லவையே; முன் வினைப் பயனுற்ருன் இங்ஙனம் உழல்கின்ருய்" என்று கோவலனுக்கு ஆறுதல் கூறுவதுபோல,

" இம்மைச் செய்தன யானறி நல்வினை
உம்மைப் பயன்கொல் ஒருதனியுழந்துஇத்
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது
விருத்தகோ பாலநீ" (அடைக். கூக-கச)

என வினவுகிறான்.

ஒரு சிறந்த காப்பியத் தலைவனுக்குரிய நற்பண்புகள் கோவலனுக்கும் உண்டு என்பதை எடுத்துரைத்த பெருமை, சிலப்பதிகாரப் பாத்திரங்களுள், மாடல மறையோனையே பெரிதும் சாரும். 'பெருஞ்சினம் பிறழாக் கடக்களிறு அடக்கிய கருணை மறவ'னாகவும், 'ஒல்காச் செல்வத்து உறு பொருள் கொடுத்த செல்லாச் செல்வ'னாகவும், 'பற்றிய கிளைஞரிற் பசிப்பிணி யறுத்துப் பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல'ாகவும் கோவலனைக் குறித்துக் காட்டியவன் மாடல மறையோனே யாவன்,

இங்ஙனம், சிறந்த பெருமைக்குரிய மாடலனைத் 'தன்னிறைக்குரிய ஆடகப் பெருநிறையைத் தருவதன் மூலம் செங்குட்டுவனும் நீர்ப்படைக்காதையில் சிறப்பிக்கின்றான்.

இருப்பினும், மறையோனின் 'தனியொரு பண்பை' மட்டும் ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கமாம்.

கோலவன் கொலையுண்டதையும், பாண்டியன் உயிர் நீத்ததையும், மாதரி நெருப்பிடை மாண்டதையும், கவுந்தியடிகள் உண்ணா நோன்பேற்று உயிர்நீக்கிக் கொண்டதையும் ஐயமற அறிந்த மறையோன் புகார்ப்பதி சென்று அச்செய்தியினை மாநாய்கனுக்கும் மாசாத்துவானுக்கும் உரைக்க, மாநாய்கன் தானம் புரியும் அறவாழ்க்கையையும், மாசாத்துவான் துறவாழ்க்கையையும் மேற்கொள்கின்றனர். ஆயின் கண்ணகியின் நற்றாயான மாநாய்கன் மனைவியும், கோவலனின் நற்றாயான மாசாத்துவான் மனைவியும் மக்களை யிழந்த பெருந்துயரம் பொறாது உயிர் துறக்கின்றனர். தன்வழியிற்

செய்தி கேட்டதனாற்றான் அவர்கள் இறந்தனர் என்றெண்ணியதுடன், தன் வாயாற் சொன்னது பாவம் எனக்கருதிய மாடலமறையோன், அப்பாவம் தீரும்பொருட்டுக் கங்கையில் நீராட வந்ததாகச் செங்குட்டுவனிடம் செப்புகிறான்.

"என்வாய்க் கேட்டோ ரிறந்தோ ருண்மையின்
நன்னீர்க் கங்கை யாடப் போந்தேன்"

(நீர்ப்படை: ௧0௯-௧௧0)

என்பது செங்குட்டுவன் மாடலனின் வரவுபற்றி வினவிய வினாவிற்கு இறுக்கப்பட்ட விடையாகும்.

பாவச் சேற்றில் வீழ்ந்ததாகப் பதறும் மாடலன் இவ்வாறிருக்க, காட்சிக்காதையில் பெரும்புலவர் சாத்தனார் பிறர் இறந்ததைப்பற்றி ஒரு சிறிதும் அஞ்சாது உரைக்கிறார்.

"கான வேங்கைக் கீழோர் காரிகை
தான்முலை யிழந்து தனித்துய ரெய்தி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்
எந்நாட் டாள்கொல்? யார்மகள் கொல்லோ?
நின்னாட்டு நாங்கள் நினைப்பினு மறியேம்"

(காட்சி: ௫௮-௬௨)

என்று மலைவாழ் மறக்குறவர் மொழிந்ததொன்று, அவர்களது உரைக்குச் சாத்தனார் விளக்கந் தருகிறார். அதுபோழ்து கோவலனது இறப்பினைப் பற்றி,

"தீவினைச் சிலம்பு காரண மாக
ஆய்தொடி அரிவை கணவற் குற்றதும்"

(காட்சி: ௬௯-௭0)

என்றும், வஞ்சினம் சாற்றிய மாபெரும் பத்தினியாகிய கண்ணகி மாநகர் மதுரையை எரித்தனள் என்பது பற்றி,

"முதிரா முலைமுகத் தெழுந்த தீயின்
மதுரை மூதூர் மாநகர் சுட்டதும்"
(காட்சி: எசு–எஎ)

என்றும், 'திருவீழ் மார்பின் தென்னவன் கோமான் தயங்கிணர்க்கோதை'யாகிய பாண்டிமாதேவியின் சாவினைப் பற்றி

"தன்னுயிர் கொண்டு அவனுயிர் தேடினள்போல்
பெருங்கோப் பெண்டு மொருங்குடன் மாய்ந்தனள்"
(காட்சி: அடு–அசு)

என்றும் கூறுகின்றார். ஆனால் இங்ஙனம் உரைத்ததைப் பாவம் என்று சாத்தனார் கருதினாரில்லை; இதற்காக நீர்க் கங்கையிற் படியவேண்டும் என்றும் அவர் எண்ணினாரில்லை.

பிறரது சாவினைப் பற்றி உரைத்த சாத்தனாரை இளங்கோவடிகளும் மாடலனுக்கு ஆடகப்பொன் தந்த செங்குட்டுவனும் போற்றியே உரைக்கின்றனர். 'தண்டமிழ்ச்சாத்தன்', தண்டமிழாசான் சாத்தன்' என்று இளங்கோவடிகளாலும்,

"துன்னிய துன்பந் துணிந்துவந் துரைத்த
நன்னூற் புலவற்கு நன்கனம் உரைத்து"
(காட்சி: க0டு–க0சு)

என்று செங்குட்டுவனாலும் புகழப்படுகிறார். எனவே பிறர் இறப்பினைச் சொல்வது பாவம் என்று காவிய ஆசிரியரும் அவரது தலைவனும் எண்ணினார்களல்லர்.

'பிறர் மாய்ந்ததை எடுத்துரைப்பது பாவம்; அப்பாவம் போக்கக் கங்கையிற் படிதல் வேண்டும்' என்னும் அந்தண மறையவனையும் படைத்து, பிறரது இறப்பினைத் துணிந்து வந்து உரைக்கும் நன்னூற் புலவனும் தண்தமிழ் ஆசானுமாகிய சாத்தனையும் ஒருங்கு காட்டியதில் மறைந்துள்ள இளங்கோவடிகளின் உட்கருத்து (இருநாகரிகங்கள் வேறுபாடு) மிகவும் உன்னற்பாலது.

# மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

## I. சங்க வெளியீடு

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | — | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | — | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம் | — | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) | — | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக் கலம்பகம் | — | 0 | 6 | 0 |
| 13. | கல்லைச்சிலேடை வெண்பா | — | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | — | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீ கிருஷ்ண சரித்திர விமர்சனம் | — | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (தொகுப்பு) | — | 0 | 4 | 0 |

---

## II. செந்தமிழ் வெளியீடு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) | — | 0 | 4 | 0 |
| 2. | கனுநூல் (5) இனியவை நாற்பது (உரை) | — | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | — | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | — | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 9. | அநுமான விளக்கம் | — | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்க யோகக்குறள் | — | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் | — | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | — | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச் செய்யுட்கள் | — | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | — | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை | — | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப் பொருட்பாடம் | — | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | — | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப் பாட்டியல் (உரையுடன்) | — | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பக மூலமும் உரையும் | — | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா | — | 0 | 8 | 0 |
| 24. | குருமொழி வினா விடை | — | 0 | 1 | 0 |
| 25. | கேசவப் பெருமாள் இரட்டைமணிமாலை | — | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகை திருவிருத்தம் | — | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத் திருப்பணிமாலை | — | 0 | 8 | 0 |
| 30 | ஞானமிர்தக் கட்டளை | — | 0 | 3 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் | — | 0 | 8 | 0 |
| 33. | உவமான சங்கிரகம் | — | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் | — | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை | — | 0 | 2 | 0 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ் | — | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகை நிகண்டு | — | 0 | 6 | 0 |
| 42. | அகராதி நிகண்டு | — | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடு தூது | — | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை | — | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார் சதகம் | — | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் | — | 0 | 3 | 0 |
| 47. | பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100) | | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் | — | 0 | 6 | 0 |
| 49. | கூடற்புராணம் | — | 0 | 10 | 0 |
| 50. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) | — | 0 | 6 | 0 |
| 51. | அரும்பொருள் விளக்க நிகண்டு | — | 1 | 4 | 0 |
| 52. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் | — | 0 | 12 | 0 |
| 53. | பாப்பாவினம் | — | 0 | 10 | 0 |
| 54. | மதுரை மும்மணிக்கோவை | — | 0 | 5 | 0 |
| 55. | பழனிப் பிள்ளைத்தமிழ் | — | 0 | 3 | 0 |
| 56. | கடம்பர் கோயில் உலா | — | 0 | 6 | 0 |
| 57. | சங்கரநயினார்கோயில் அந்தாதி | — | 0 | 6 | 0 |
| 58. | கலைசைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 59. | பெருந்தொகை | — | 5 | 0 | 0 |
| 60. | சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை | — | 0 | 5 | 0 |
| 61. | சிராமலைக்கோவை | — | 0 | 12 | 0 |
| 62. | மத்யவியாயோகம் | — | 0 | 2 | 0 |
| 63. | உமிர்தரஞ்ஜனி | — | 0 | 2 | 0 |
| 64. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் | — | 0 | 8 | 0 |
| 65. | திருச்சிறுபுலியூருலா | — | 0 | 12 | 0 |
| 66. | துணைத்தலைவர் நினைவுமலர் | — | 0 | 10 | 0 |
| 67. | மதுரைத் தமிழ்ச் சங்கப் பொன்விழா மலர் | — | 2 | 0 | 0 |

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1 ரூ. 4 விதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.

2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபாய் ஒன்றுக்கு 3 காசு விதம் கழிவு தள்ளிக் கொடுக்கப்படும்.

---

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் (B. A. Bar-at-law.) M. L. C. அவர்களால் மதுரை விவேகாநந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.